செ.வெ.எண்:16 நாள்:07.10.2020

**வணிக வரி மற்றும் பத்திரபதிவு செயலாளர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட கொரோனா தடுப்பு கூடுதல் சிறப்பு அலுவலர் திருமதி பீலா ராஜேஷ், இ.ஆ.ப., அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் ஒன்றியம் மல்லப்பாடி ஊராட்சிகளில் தடைசெய்யப்பட்ட பகுதிகள், பர்கூர் பேரூராட்சி பகுதிகளில் கொரோனா நோய் தொற்று குறித்த மருத்துவ முகாமினை இன்று (07.10.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இவ்வாய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானு ரெட்டி இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பண்டி கங்காதர் இ.கா.ப., ஆகியோர் உடனிருந்தனர்.**

**தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வடக்கிழக்கு பருவ மழை முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் இன்று (07.10.2020) நடைபெற்றது.**

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் ஒன்றியம் மல்லப்பாடி ஊராட்சி பாரதியார் நகர் கொரோனா வைரஸ் நோய் தொற்றால் தடைசெய்யப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து பி.ஜி.ஆர், மாதேப்பள்ளி ஊராட்சியில் தடைசெய்யப்பட்ட பகுதிகள் மற்றும் அங்கு அமைக்கப்பட்டுள்ள மருத்துவ முகாமை பார்வையிட்டு அங்குள்ள நோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படும் விவரங்களை கேட்டறிந்தார்.

தொடர்ந்து பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் கொரோனா நோய் தொற்று பாதுகாப்பு மையம் (COVID CARE CENTER) நேரில் பார்வையிட்டு கொரோனாவால் பாதிக்கப்பட்ட நோயாளிகளிடம் அவர்களுக்கு அளிக்கப்படும் உணவு, குடிநீர் மற்றும் மருத்துவ சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார். நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க அமைக்கப்பட்டுள்ள வார்டுகளையும் அங்கு போடப்பட்டுள்ள படுக்கை வசதிகள், சுவாசகருவிகள், மருத்துவ உபகரணங்கள், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள், மருத்துவப்பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் தங்கி பணியாற்றும் குடியிருப்பு வளாகத்தினை பார்வையிட்டார்.

தொடர்ந்து கிருஷ்ணகிரி கே.ஆர்.பி அணைப்பகுதிகளில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை மற்றும் தீயணைப்புத்துறை சார்பாக அமைக்கப்பட்டுள்ள வடகிழக்கு பருவமழை காலங்களில் பொதுமக்கள் அவர்களுடைய உடமைகளை பாதுகாக்கும் வகையில் பேரிடர்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த மாதிரி ஒத்திகை பயிற்சியை நேரில் பார்வையிட்டார். அதனைத்தொடர்ந்து அரசு மேல்நிலைப்பள்ளியில் வெள்ள நிவாரண மையம் பார்வையிட்டார். மேலும் கே.ஆர்.பி. அணையின் மதகுகள் மற்றும் மணல் மூட்டைகளை நேரில் பார்வையிட்டார்.

தொடர்ந்து கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை போலுப்பள்ளியில் ரூ.338.953/- கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் மருத்துவக் கல்லூரி கட்டுமாண பணிகளை நேரில் பார்வையிட்டார். கிருஷ்ணகிரி நகராட்சியில் உள்ள மாவட்ட பதிவாளர் அலுவலகத்தை பார்வையிட்டு பெயர் பலகையை பெரிதாக வைக்க வேண்டும் மற்றும் அலுவலகத்தை துய்மை வைத்துக்கொள்ள வேண்டும் என அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பாக வடக்கிழக்கு பருவ மழை முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

**வணிக வரி மற்றும் பத்திரபதிவு செயலாளர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட கொரோனா தடுப்பு கூடுதல் சிறப்பு அலுவலர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்ததாவது:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்று விழிப்புணர்வு மற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டத்தை பொறுத்தவரை மொத்தம் 4993 நபர்கள் கொரோன நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 69 நபர்கள் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளனர். தற்சமயம் 46 கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 2 பரிசோதனை மையங்கள் அமைக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது. 24 மணி நேரம் கட்டுப்பாட்டு அறை பயன்பாட்டில் உள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இதுவரை 53284 கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒருநாளைக்கு 1200 முதல் 1400 வரை கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது.

தொடர்ந்து வடகிழக்கு பருவமழை தொடர்பாக இதுவரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் 2 முறை ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பாக 11 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், வடகிழக்கு பருவமழையால் அதிக பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகள், மிதமான பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகள் மற்றும் குறைந்த பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகள் என 3 பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளது. 47 வெள்ள நிவாரண மையங்கள் தயார்நிலையில் உள்ளது. இது குறித்து ஆய்வுக்கூட்டத்திற்கு முன்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக அந்தந்த பகுதி வட்டாட்சியர்கள் மற்றும் துறை அலுவலர்கள் பணிகள் மேற்கொள்ள தயார்நிலையில் உள்ளனர். இது தொடர்பாக புகார் தெரிவிக்க 24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறை தயார் நிலையில் உள்ளது.

மேலும் முககவசம் அணியாதவர்களுக்கு ரூ.23/- இலட்சம் அபராதம் வசூல் செய்யப்பட்டுள்ளது. 58 சிறப்பு பேரிடர் மேலாண்மை படை தயார்நிலையில் உள்ளது. இதுதொடர்பாக தீயணைப்புத்துறை சார்பாக பேரிடர்கால முன்னெச்சரிக்கை குறித்து செயல்முறைகள் ஆய்வுக் கூட்டத்திற்கு முன்பாக ஒத்திகைப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டதை ஆய்வு செய்யப்பட்டது. மேலும் பொதுமக்கள் வடகிழக்கு பருவமழை காலங்களில் அரசின் விதிமுறைகளை பின்பற்றி தங்களது உடைமைகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வன அலுவலர் திரு.பிரபு, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.சாந்தி, இணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.பரமசிவம், அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.முத்துச்செல்வன், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.கோவிந்தன், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கற்பகவள்ளி, துணை காவல் கண்காணிப்பாளர்கள் திரு.தங்கவேல், திரு.சரவணன், தீயணைப்புத்துறை மாவட்ட அலுவலர் திரு.ஜி.இராமசந்திரன், நிலை அலுவலர் திரு.சி.மோகன்குமார், நிலை அலுவலர் (போக்குவரத்து) திரு.சந்திரன், செயற்பொறியாளர் திரு.சரவணக்குமார், நிர்வாக மாவட்ட பதிவாளர் திரு.செந்தில்குமார், பத்திர பதிவுத்துறை தணிக்கை மாவட்ட பதிவாளர் திரு.சிவலிங்கம், வட்டாட்சியர்கள் திரு.சண்முகம், திரு.வெங்கடேசன் மற்றும் அரசு மருத்துவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**

**கிருஷ்ணகிரி.**